**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி – 2010–2011ம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்விற்கு, செயற்பொறியாளரின் தேர்ந்தோர் பட்டியல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3)துறை**

**அரசாணை (ப) எண்.346** **நாள்: 08.07.2010**

**படிக்கப்பட்டது:-**

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண் 11668/2010/எப்1இ, நாள் 17.6.2010.

*****

**ஆணை:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில், தமிழ்நாடு நகராட்சிப் பணியில், 2010–2011–ஆம் ஆண்டிற்கான, கண்காணிப்புப் பொறியாளர் பணியிடத்தினை பதவி உயர்வு வாயிலாக நிரப்பிட, தகுதியுடைய செயற்பொறியாளர்களின் பணியிட மதிப்பீட்டினை தயாரித்து, அதற்கு அரசின் ஒப்புதல் வேண்டி, செயற்குறிப்பு அளித்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்து, நகராட்சி நிர்வாகத் துறையில், தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணியில், 2010–2011–ஆம் ஆண்டிற்கு, கண்காணிப்புப் பொறியாளராக பதவிஉயர்வு பெறுவதற்கு கீழ்க்காணும் ஒரு நபர் அடங்கிய செயற்பொறியாளரின் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண். | செயற்பொறியாளரின் பெயர் | தற்போது பணியாற்றும் நகராட்சி |
|---|---|---|
| 1. | திரு ஆர். வெங்கடாசலம் | மண்டல செயற்பொறியாளர், சேலம் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சேலம். |

3. மேலே பத்தி இரண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலினை சம்பந்தப்பட்ட அலுவலருக்கு தெரிவிப்பதுடன், பட்டியலில் சேர்க்கப்படாத ஏனைய நபர்களுக்கும் தெரிவித்து அவர்கள் அதனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை சம்பந்தப்பட்ட கோப்பில் பதிவு செய்யுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5.
திரு ஆர். வெங்கடாசலம், மண்டல செயற்பொறியாளர், சேலம் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சேலம். (நகராட்சி நிர்வாக ஆணையர் வழிமுறையாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை–108.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
**நகல்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந,2) துறை, சென்னை–9.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்